புதுச்சேரி மாநில தலைமை அலுவலகம்
38, Main Road, Oulgreat,
Near KFC Moolakulam,
Puducherry-605009,
Cell: 97505 89992,9629620802

PRGI.NO.TNTAM/25/A1635 T/TN/2026/0316/6130/1505

# நீதிகதிர் எக்ஸ்பிரஸ்

NEETHIKATHIR EXPRESS
மறைக்கப்பட்ட செய்திகள் திறக்கப்படும்
காலை நாளிதழ்

நீதி கதிர் எக்ஸ்பிரஸ் சென்னை அலுவலகம்.
No.19\10 1st Floor
F1 ,7th Street, Nehru Colony,
Nanganallur, Chennai - 600061
Cell: 7810068421,9488420449
neethiPress@ gmail.com

மலர்: 01 • இதழ்: 269 • 04-04-2026 • சனி • பக்கம்- 4 • விலை- ரூ.5 • திருச்சி- புதுச்சேரி
Volume 01 • Issue: 269 • 04-04-2026 • Saturday • Pages - 4 • Price- Rs. 5 • Trichy-Puducherry




## மக்கள் சேவையே மகேசன் பணி: அரசு ஊழியர்களுக்குப் பிரதமர் அறிவுரை



புதுடெல்லி: ஏப்.4–

“மக்கள் சேவையே மகேசன் பணி” என்ற கொள்கையுடன் அரசு ஊழியர்கள் அர்ப்பணிப்பு உணர்வுடன் செயல்பட வேண்டும் என்று பிரதமர் நரேந்திர மோடி அறிவுறுத்தி உள்ளார்.

மத்திய அரசு ஊழியர்களுக்காக ‘கர்மயோகி சாதனா சப்தாஹ்’ என்ற பெயரில் திறன் மேம்பாட்டு பயிற்சி வழங்கப்படுகிறது. இதன்படி ஏப்ரல் 2 முதல் 8ம் தேதி வரை சிறப்பு பயிற்சி அளிக்கப்பட உள்ளது. இதன் தொடக்க விழாவில் பிரதமர் நரேந்திர மோடி காணொலி வாயிலாக பேசியதாவது: கடந்த பிப்ரவரியில் பிரதமர் அலுவலகத்தை (சேவா தீர்த்) திறந்து வைத்தேன்.

அப்போது, “வரும் 2047க்குள் வளர்ச்சி அடைந்த இந்தியாவை உருவாக்க வேண்டும் என்ற லட்சியத்தோடு சேவா தீர்த் அலுவலகங்களில் மத்திய அரசு ஊழியர்கள் கால் பதிக்க வேண்டும்” என்று அழைப்பு விடுத்தேன். இப்போதும் அதே கருத்தை முன்வைக்கிறேன். மத்திய அரசு துறைகளில் பணியாற்றும் ஒவ்வொரு ஊழியரும் கர்மயோகியாக செயல்பட வேண்டும்.

‘மக்கள் சேவையே மகேசன் பணி’ என்ற கொள்கையுடன் அரசு ஊழியர்கள் அர்ப்பணிப்பு உணர்வுடன் செயல்பட வேண்டும். மக்களின் நலன்களுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும். இந்தியாவின் ஒவ்வொரு குடிமகனுக்கும் ஒரு கனவு இருக்கிறது. அதை நிறைவேற்ற அரசு ஊழியர்கள் முழு ஆதரவு அளிக்க வேண்டும். இன்றைய உலகில் தொழில்நுட்பங்கள் மிகுந்த முக்கியத்துவம் பெற்று உள்ளன.

கடந்த 11 ஆண்டுகளில் மத்திய அரசின் அனைத்து துறைகளிலும் புதிய தொழில்நுட்பங்கள் அறிமுகம் செய்யப்பட்டு உள்ளன. ஆட்சி நிர்வாகத்தில் புதிய தொழில்நுட்ப புரட்சியை ஏற்படுத்தி இருக்கிறோம். தற்போது ஆட்சி நிர்வாகத்தில் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்துக்கும் முன்னுரிமை அளித்து வருகிறோம். இதன் மூலம் அரசு நிர்வாகத் திறன் மேலும் மேம்படும்.

அனைத்து அரசு ஊழியர்களும் தொழில்நுட்பத்தை முழுமையாகப் பயன்படுத்த வேண்டும். குறிப்பாக செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தில் நிபுணத்துவம் பெற வேண்டும். ஒரு காலத்தில் முன்னேறிய மாநிலங்கள், பின்தங்கிய மாநிலங்கள், நலிவடைந்த மாநிலங்கள் என்று பல்வேறு பிரிவுகள் இருந்தன.

மத்திய அரசின் நடவடிக்கைகளால் இந்த இடைவெளி குறைந்திருக்கிறது. மாநிலங்கள் வளர்ச்சி அடைந்தால் மட்டுமே நமது நாடு வளர்ச்சி அடையும். கிராமங்கள், நகரங்களில் செயல்படும் மத்திய அரசு அலுவலகங்கள், மத்திய அரசின் முகமாக உள்ளன.

அவற்றில் பணியாற்றும் அரசு ஊழியர்கள் மக்களின் நம்பிக்கையை பெறும் வகையில் பணியாற்ற வேண்டும். வளர்ச்சி அடைந்த இந்தியா என்ற நமது லட்சிய பயணத்தில் “கர்மயோகி சாதனா சப்தாஹ்” பயிற்சி முகாம் மிக முக்கிய அத்தியாயமாக இருக்கும். இவ்வாறு அவர் பேசினார்.

## தேர்தல் நாளில் தமிழகம் உள்ளிட்ட 5 மாநிலங்களில் ஊதியத்துடன் கூடிய விடுப்பு அளிக்க உத்தரவு

புதுடெல்லி: ஏப்.4–

தமிழ்நாடு, புதுச்சேரி உள்ளிட்ட சட்டப்பேரவைத் தேர்தல் நடைபெற உள்ள 5 மாநிலங்களில் வாக்குப்பதிவு தினத்தன்று தினக்கூலிகள், தற்காலிகப் பணியாளர்கள் உட்பட அனைத்து ஊழியர்களுக்கும் ஊதியத்துடன் கூடிய விடுமுறை அளிக்கப்படும் என்று இந்திய தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

இது தொடர்பாக இந்திய தேர்தல் ஆணையம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், ‘1951ம் ஆண்டின் மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின் பிரிவு 135பின்படி எந்த ஒரு வணிகம், வர்த்தகம், தொழில்துறை நிறுவனம் அல்லது வேறு ஏதேனும் அமைப்பில் பணிபுரிபவர்களில் வாக்களிக்கத் தகுதியுள்ள ஒவ்வொரு நபருக்கும் வாக்குப் பதிவு நாளன்று ஊதியத்துடன் கூடிய விடுமுறை அளிக்கப்படும். இதற்காக எந்த பிடித்தமும் செய்யப்படாது. இந்த விதிகளை மீறும் எந்த ஒரு உரிமையாளரும் அபராதத்துக்கு உள்ளாவார்.

தங்கள் தொகுதிக்கு வெளியே அமைந்துள்ள தொழிற்சாலை அல்லது வணிக நிறுவனங்களில் பணிபுரியும் அல்லது வேலை செய்யும் வாக்காளர்கள், தேர்தல் நடைபெறும் தொகுதியில் வாக்காளர்களாக பதிவு செய்திருந்தால், வாக்குப்பதிவு நாளன்று தங்களது வாக்குகளைச் செலுத்துவதற்கு ஏதுவாக ஊதியத்துடன் கூடிய விடுமுறை பெறும் உரிமை அவர்களுக்கு உண்டு. அனைத்து மாநில மற்றும் யூனியன் பிரதேச அரசுகளும் இதைகண்டிப்பாகபின்பற்றுவதை உறுதி செய்ய வேண்டும்.

இந்த அறிவிப்பு சட்டப்பேரவைத் தேர்தல் நடைபெற உள்ள தமிழ்நாடு, கேரளா, புதுச்சேரி, அசாம், மேற்கு வங்கம் ஆகிய மாநிலங்களுக்குப் பொருந்தும். மேலும், 8 தொகுதிகளில் இடைத் தேர்தல் நடைபெற உள்ள கோவா, குஜராத், கர்நாடகா, மகாராஷ்டிரா, நாகாலாந்து, திரிபுரா ஆகிய ஆறு மாநிலங்களுக்கும் இது பொருந்தும்’ என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அசாம், கேரளா, புதுச்சேரி சட்டப்பேரவைகளுக்கு ஏப்ரல் 9ம் தேதி தேர்தல் நடைபெற உள்ளது. கோவா, கர்நாடகா, நாகாலாந்து, திரிபுரா ஆகிய மாநில சட்டப்பேரவைத் தொகுதிகளுக்கான இடைத் தேர்தலும் இந்த தேதியில் நடைபெற உள்ளது. தமிழ்நாடு சட்டப்பேரவை பொதுத் தேர்தல் மற்றும் குஜராத் மற்றும் மகாராஷ்டிராவின் இடைத் தேர்தல் ஆகியவ ஏப்ரல் 23ம் தேதி நடைபெற உள்ளது. மேற்கு வங்கத்தைப் பொருத்தவரை ஏப்ரல் 23 மற்றும் ஏப்ரல் 29 ஆகிய தேதிகளில் இரண்டு கட்டங்களாக தேர்தல் நடைபெற உள்ளது. இந்த தேர்தலில் பதிவாகும் வாக்குகள் அனைத்தும் மே 4ம் தேதி எண்ணப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்பட உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

## தமிழக பாஜக வேட்பாளர் பட்டியல் வெளியீடு: மயிலாப்பூரில் தமிழிசை, சாத்தூரில் நயினார் போட்டி



சென்னை: ஏப்.4–

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் அதிமுக தலைமையிலான கூட்டணியில் போட்டியிடும் பாஜக வேட்பாளர்கள் பட்டியலை வெளியிடப்பட்டுள்ளது. அதன்படி, நயினார் நாகேந்திரன் சாத்தூரிலும், தமிழிசை சவுந்தர்ராஜன் மயிலாப்பூரிலும், எல்.முருகன் அவிநாசி (தனி) தொகுதியிலும், வானதி சீனிவாசன் கோவை தெற்கிலும் போட்டியிடுகின்றனர். அண்ணாமலை தேர்தலில் போட்டியிடவில்லை.

தமிழகத்தில் வரும் 23ம் தேதி சட்டப்பேரவைத் தேர்தல் நடைபெறுகிறது. இத்தேர்தலில், 4 முனைப் போட்டி நிலவும் சூழலில் அதிமுகதலைமையிலான பாஜக, பாமக, அமமுக, தாமக உள்ளிட்ட கட்சிகள் இடம் பெற்றுள்ளன. இதில், பாஜகவுக்கு 27 தொகுதிகள் ஒதுக்கப்பட்டது. கடந்த முறை 20 தொகுதிகளில் போட்டியிட்ட பாஜக இம்முறை 27 தொகுதிகளில் களம் காண்கிறது.

தமிழக பாஜக வேட்பாளர்கள் விவரம்:

1. ஆவடி ராஜசிம்ம மஹிந்திரா என்ற அஸ்வின் குமார், 2. மயிலாப்பூர் தமிழிசை சவுந்தர்ராஜன், 3. தளி நாகேஷ் குமார், 4. திருவண்ணாமலை ஏழுமலை, 5. ராசிபுரம் (தனி) பிரேம்குமார், 6. மொடக்குறிச்சி கிருத்திகா சிவகுமார், 7. உதகமண்டலம் போஜராஜன், 8. அவிநாசி (தனி) எல். முருகன், 9. திருப்பூர் தெற்கு தங்கராஜ், 10. கோவை வடக்கு வானதி சீனிவாசன், 11. திருவாரூர் கோவி. சந்துரு, 12. தஞ்சாவூர் முருகானந்தம், 13. கந்தர்வக்கோட்டை (தனி) உதயகுமார், 14. புதுக்கோட்டை ராமச்சந்திரன், 15. அறந்தாங்கி கவிதா ஸ்ரீகாந்த், 16. திருப்பத்தூர் திருமாறன், 17. மானாமதுரை (தனி) பால கணபதி, 18. மதுரை தெற்கு ராம ஸ்ரீநிவாசன், 19. சாத்தூர் நயினார் நாகேந்திரன், 20. ராமநாதபுரம் நாகேந்திரன், 21. திருச்செந்தூர் ராதாகிருஷ்ணன், 22. வாசுதேவநல்லூர் (தனி) ஆனந்தன் ஐயாசாமி, 23. ராதாபுரம் பாலகிருஷ்ணன், 24. நாகர்கோவில் காந்தி, 25. குளச்சல் சிவக்குமார், 26. பத்மநாபபுரம் ரமேஷ், 27. விளவங்கோடு விஜயதரணி, கடந்த சட்டப்பேரவைத் தேர்தலில் பாஜக 4 தொகுதிகளில் வெற்றி பெற்றது குறிப்பிடத்தக்கது.

## மக்களவைத் தொகுதிகளை 816 ஆக அதிகரிக்க நாடாளுமன்ற சிறப்புக் கூட்டம் ஏப்.16ல் தொடக்கம்

புதுடெல்லி: ஏப்.4–

மக்களவைத் தொகுதிகளின் எண்ணிக்கையை 816 ஆக உயர்த்த வகை செய்யும் மசோதாக்களை நிறைவேற்ற நாடாளுமன்றத்தின் சிறப்பு கூட்டம் ஏப்ரல் 16ம் தொடங்குகிறது.

நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத் தொடரின் முதல் அமர்வு கடந்த ஜனவரி 28 முதல் பிப்ரவரி 13ம் தேதி வரை நடைபெற்றது. இதன் 2வது அமர்வு மார்ச் 9ம் தேதி தொடங்கி நேற்றுடன் நிறைவடைந்தது. கடைசி நாளான நேற்று நாடாளுமன்ற விவகாரத் துறை அமைச்சர் கிரண் ரிஜிஜு மாநிலங்களவையில் பேசும்போது, “அடுத்த சில வாரங்களில் நாடாளுமன்றத்தின் சிறப்பு கூட்டத் தொடர் நடைபெறும். இதில் முக்கிய மசோதாக்கள் நிறைவேற்றப்படும்“ என்று தெரிவித்தார்.

இது தொடர்பாக மத்திய அரசு வட்டாரங்கள் கூறியதாவது: நாடாளுமன்றத்தின் சிறப்பு கூட்டத் தொடர் ஏப்ரல் 16ம் தேதி தொடங்கி, 18ம் தேதி வரை நடைபெற உள்ளது. இதில் மக்களவைத் தொகுதிகளின் எண்ணிக்கையை 543ல் இருந்து 816 ஆக அதிகரிக்க வகை செய்யும் மசோதாக்களை நிறைவேற்ற திட்டமிடப்பட்டு உள்ளது. இதன்மூலம் மகளிர் இடஒதுக்கீட்டு சட்டத்தை முன்கூட்டியே அமல்படுத்த முடியும்.

கடந்த 2023ம் ஆண்டில் மகளிர் இடஒதுக்கீடு சட்டம் நிறைவேற்றப்பட்டது. இதன்படி மக்களவையில் மூன்றில் ஒரு பகுதி இடங்கள் மகளிருக்கு ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும். புதிய மசோதாக்களின்படி மக்களவைத் தொகுதிகளின் இடங்கள் 816 ஆக அதிகரிக்கும். இதில் 273 இடங்கள் மகளிருக்கு ஒதுக்கீடு செய்யப்படும். இவ்வாறு மத்திய அரசு வட்டாரங்கள் தெரிவித்தன.

இது தொடர்பாக காங்கிரஸ் பொதுச் செயலாளர் ஜெய்ராம் ரமேஷ் நேற்று முன்தினம் சமூக வலைதளத்தில் வெளியிட்ட பதிவில், “மக்களவைத் தொகுதிகளின் எண்ணிக்கையை 50 சதவீதமாக அதிகரிக்க மத்திய அரசு ஒரு மசோதாவை வலுக்கட்டாயமாக நிறைவேற்ற திட்டமிட்டு உள்ளது. உதாரணமாக உத்தர பிரதேசத்தில் தற்போது 80 மக்களவைத் தொகுதிகளும், தமிழ்நாட்டில் 39 தொகுதிகளும் உள்ளன.

புதிய மசோதாவால் உத்தர பிரதேசத்தில் தொகுதிகளின் எண்ணிக்கை 120 ஆக உயரும். தமிழகத்தில் 59 ஆக மட்டுமே அதிகரிக்கும். வட மாநிலங்கள் கூடுதலாக 200 தொகுதிகளைப் பெறும். தென் மாநிலங்களுக்கு 66 இடங்கள் மட்டுமே கிடைக்கும்” என்று தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக ஜெய்ராம் ரமேஷ் மாநிலங்களவையில் நேற்று கூறியதாவது: தமிழ்நாடு, புதுச்சேரி, கேரளா உள்ளிட்ட மாநிலங்களில் தேர்தல் நடத்தை விதிகள் அமலில் உள்ளன. இந்த அரசியல் சூழலைப் பயன்படுத்தி மக்களவைத் தொகுதிகளின் எண்ணிக்கையை அதிகரிக்கும் மசோதாவை அறிமுகம் செய்ய மத்திய அரசு திட்டமிட்டுள்ளது.

மகளிருக்கான தொகுதிகளை அதிகரிப்பதாக கூறி அரசியல் ஆதாயம் தேட பாஜக முயற்சி செய்கிறது. இதை வன்மையாகக் கண்டிக்கிறோம். புதிய மசோதாக்கள் தொடர்பாக அனைத்துக் கட்சி கூட்டத்தை நடத்த வேண்டும். இவ்வாறு ஜெய்ராம் மரேஷ் தெரிவித்தார்.

காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே மாநிலங்களவையில் பேசும்போது, “மகளிக்கு இடஒதுக்கீடு வழங்குவதை காங்கிரஸ் ஆதரிக்கிறது. ஆனால், இந்த விவகாரத்தில் அரசியல் விளையாட்டை நடத்தக்கூடாது” என்று தெரிவித்தார்.

இது தொடர்பாக மத்திய அமைச்சர் ஜே.பி. நட்டா கூறும்போது, “ஒரு மசோதாவை எப்போது கொண்டு வர வேண்டும் என்பது மத்திய அரசுக்கு தெரியும்“ என்றார்.

## வெளிநாட்டு நன்கொடை ஒழுங்குமுறை சட்டதிருத்த மசோதாவை திரும்பப் பெற வேண்டும் என பிரதமருக்கு முதலமைச்சர் கடிதம்

சென்னை: வெளிநாட்டு நன்கொடை ஒழுங்குமுறை சட்டதிருத்த மசோதாவை திரும்பப் பெற வேண்டும் என பிரதமர் மோடிக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார். சிறுபான்மையின தொண்டு நிறுவனங்களுக்கு எதிரான மசோதாவை கொண்டுவர ஒன்றிய அரசு முயற்சி. மத்திறிய அரசு கொண்டு வரும் சட்ட திருத்தம் சிறுபான்மையின தொண்டு நிறுவனங்கள் மீது நேரடி தாக்குதல் நடத்துகிறது. கல்வி, சுகாதார சேவைகளை வழங்கும் தொண்டு நிறுவனங்களின் நிதி ஆதாரத்தை முற்றிலும் அழிக்கும் அபாயம் உள்ளது

# சிங்கவரத்தில் பாமக வேட்பாளர் வாக்கு சேகரிப்பை தொடங்கினார்.



செஞ்சி, ஏப்4

தேசிய ஜனநாயக கூட்டணியின் செஞ்சி தொகுதி பாமக வேட்பாளர் கணேஷ்குமார் நேற்று காலை செஞ்சி அருகே உள்ள சிங்கவரம் கிராமத்தில் உள்ள அரங்கநாதர் ஆலயத்தில் தரிசனம் செய்தார். பின்னர் வாக்கு சேகரிப்பை தொடங்கினார்.

அப்போது அதிமுகவைச் சேர்ந்த மாநில எம் ஜி ஆர் மன்றம் கு.கண்ணன், எம்ஜிஆர் இளைஞரணி பிரதிவிராஜ், ஒன்றிய செயலாளர்கள் கோவிந்தசாமி, சோழன், பாலகிரிஷ்ணன், வழக்கறிஞர் அணி அருண் தத்தன், வேலவன், பாமக நிர்வாகிகள் சின்னதம்பி, திருமலை, முருகன், அன்பழகன், அருண்மொழிதேவன், ஜெயகுமார், ஜேபி முருகன், அமமுக நிர்வாகிகள் பழனிவேல், இளங்கோ, சிலா பாஷா, கோவிந்தன், பாஜக நிர்வாகிகள் தாராசிங் என்கிற சிவகுமார், தங்கராமு, அன்பழகன் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

# மதச்சார்பற்ற கூட்டணிக்கு ஆதரவு..
## ஈரோட்டில் புரட்சிகர இளைஞர் முன்னணி அறிவிப்பு..



ஈரோடு. ஏப்ரல்.04

மதசார்பற்ற முற்போக்கு கூட்டணிக்கு தங்களின் ஆதரவை இந்த தேர்தலில் வழங்குவதாக புரட்சிகர இளைஞர் முன்னணி அமைப்பினர் அறிவித்துள்ளனர்.

தமிழகத்தில் நடைபெறவிருக்கும் சட்டமன்ற பொது தேர்தலில், திமுக தலைமையிலான மதசார்பற்ற முற்போக்கு கூட்டணியும், அதிமுக பாஜக தலைமையிலான இந்தியா கூட்டணியும் களத்தில் உள்ளது.

மேலும் சீமானின் நாம் தமிழர் கட்சி, நடிகர் விஜயின் தமிழக வெற்றி கழகம் உள்ளிட்ட சில கட்சிகள் இந்த தேர்தலில் களம் காண்கின்றன.

இந்த நிலையில் திமுக தலைமையிலான மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகள் தங்களின் வேட்பாளர்களை அறிவித்து தேர்தல்களில் தீவிர தேர்தல் பிரச்சாரம் செய்து வருகின்றனர்.

இதனைத் தொடர்ந்து தமிழ்நாடு புரட்சிகர இளைஞர் முன்னணி அமைப்பினர், பாஜக அரசின் மதம் சார்ந்த அரசியலையும், அதற்கு துணை நிற்கும் அதிமுக தலைமையிலான கூட்டணி கட்சிகளின் மக்கள் விரோத செயல்பாடுகளை கண்டித்தும், அவர்களுக்கு எதிராக தமிழக வாக்காளர்கள் வாக்களிக்க வேண்டுமென கேட்டும், திமுக தலைமையிலான மதசார்பற்ற முற்போக்கு கூட்டணிக்கு தங்களின் ஆதரவுகளை அனைத்து தொகுதிகளிலும் வழங்குவதாகவும் பிரித்திகரை இளைஞர் முன்னணி நிர்வாகிகள் தெரிவித்தனர்.

ஈரோட்டில் மதிமுக மாவட்ட அலுவலகத்தில் நடைபெற்ற செய்தியாளர்கள் சந்திப்பில், இந்த அறிவிப்பை அவர்கள் செய்தியாளர்கள் மத்தியில் வெளியிட்டனர்.

இந்தசெய்தியாளர்கள் சந்திப்பில் புரட்சிகர இளைஞர் முன்னணி நிர்வாகிகள், ஈரோடு மாநகர மாவட்ட புரட்சிகர இளைஞர் முன்னணி செயலாளர் செயப்பிரகாசம், கோவை மாநகர ஒருங்கிணைப்பாளர், மலரவன், காங்கேயம் நகரம் ஒருங்கிணைப் பாளர் பெண்கள் பிரிவு கனிமொழி, திருப்பூர் புறநகர செயலாளர் கவி, பள்ளிபாளையம் நகர செயலாளர் மாணிக்கம், உள்ளிட்ட புரட்சிகர இளைஞர் முன்னணி நிர்வாகிகள் செய்தியாளர்கள் சந்திப்பில் கலந்து கொண்டனர்.

# இந்திரா நகர் தொகுதி: 'ஜக்கு' சின்னத்திற்கு ஆதரவு திரட்டி ஏ.கே.டி. ஆறுமுகம் தீவிர வாக்கு சேகரிப்பு!



புதுச்சேரி, ஏப்.4–

புதுச்சேரி இந்திரா நகர் தொகுதி என்.ஆர். காங்கிரஸ் வேட்பாளர் ஏ.கே.டி. ஆறுமுகம், தனது 'ஜக்கு' சின்னத்திற்கு ஆதரவு திரட்டி தொகுதி முழுவதும் சூறாவளிப் பிரச்சாரத்தில் ஈடுபட்டு வருகிறார்.

பிரச்சாரத்தின் ஒரு பகுதியாக, இந்திரா நகர் தொகுதிக்குட்பட்ட மேட்டுப்பாளையம் பகுதியில் ஏ.கே.டி. ஆறுமுகம் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார். இப்பகுதியில் உள்ள ஒவ்வொரு வீடாக நேரடியாகச் சென்ற அவர், பொதுமக்களிடம் ஆசி பெற்று, தனது சின்னமான 'ஜக்கு' சின்னத்திற்கு வாக்களிக்குமாறு கேட்டுக்கொண்டார்.

இந்த வாக்கு சேகரிப்புப் பணியின் போது: புதுச்சேரி என்.ஆர். காங்கிரஸ் தொண்டரணி தலைவர் வீரா உடன் இருந்து வீதி வீதியாகச் சென்று வாக்கு திரட்டினார். என்.ஆர். காங்கிரஸ் கட்சியின் முக்கிய நிர்வாகிகள் மற்றும் ஏராளமான தொண்டர்கள் கலந்துகொண்டனர். கூட்டணி கட்சிகளைச் சேர்ந்த நிர்வாகிகள் மற்றும் தொண்டர்களும் பெரும் திரளாகப் பங்கேற்று வேட்பாளருக்கு ஆதரவாகக் கோஷங்களை எழுப்பினர். மேட்டுப்பாளையம் பகுதியில் வேட்பாளர் ஏ.கே.டி. ஆறுமுகத்திற்கு பொதுமக்கள் உற்சாக வரவேற்பு அளித்தனர். தொகுதியின் வளர்ச்சி மற்றும் மக்கள் நலத்திட்டங்களை முன்னிறுத்தி அவர் வாக்கு சேகரித்ததால், தேர்தல் களம் இந்திரா நகர் தொகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# சேலத்தில் விஜய்யை வெளுத்து வாங்கிய சிபிஐ சண்முகம்.
## ஜோசப் விஜய் ஒரு நீர்க்குமிழி புறக்கணிக்க வேண்டிய சக்தி என காட்டம்.



சேலம். ஏப்.4–

தமிழக அரசியலில் நீர்க்குமிழியாக மட்டுமே நடிகர் விஜய் இருப்பார் என சேலத்தில் நடந்த திமுக கூட்டணி கட்சியின் தேர்தல் பரப்புரை பொதுக்கூட்டத்தில் மார்க்சிஸ்ட் கம்யூ., கட்சியின் மாநில செயலாளர் சண்முகம் பேசினார்.

கம்யூனிஸ்ட் கட்சியின் அரசியல் விளக்க கூட்டம் மற்றும் மதச்சார்பற்ற கூட்டணி வேட்பாளர்களுக்கு ஆதரவு திரட்டும் பொதுக்கூட்டம் சேலம் கோட்டை மைதானத்தில் நடந்தது. இதில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் பெ.சண்முகம் கலந்து கொண்டு பேசுகையில், 'அமெரிக்க, இஸ்ரேல் கூட்டு நடவடிக்கையால், இன்று உணவு உற்பத்தி இழப்பு, வேலை இழப்பு, தொழில் பாதிப்பு, காஸ் சிலிண்டர் தட்டுப்பாடு என பல்வேறு பாதிப்புகள் ஏற்பட்டு வருகிறது. இதனால் பல தொழிலாளர்கள் வேலை இழந்துள்ளனர். எனக்கும் திமுகவுக்கும் தான் போட்டி என்று விஜய் கூறுவது வேடிக்கையாக உள்ளது. பாஜக மற்றும் அதிமுகவை பற்றிப் பேச விஜய் மறுத்து வருகிறார்.

சிலிண்டர் தட்டுப்பாட்டுக்கு இவங்க அவங்க காரணம் என பட்டும் படாமல் பேச்சு வருகிறார். எரிவாயு தட்டுப்பாட்டுக்கு மோடி தான் காரணம் என விஜய் பேசுவதற்கு அச்சப்படுகிறார்.

விஜய் நடித்துக் கொண்டிருந்தபோது பல்வேறு இடங்களுக்கு படப்பிடிப்புக்கு சென்று இருப்பார். அப்போதெல்லாம் படப்பிடிப்பு இடத்தில் எந்த சலசலப்பும் ஏற்படவில்லை. அதேபோல், சமீபத்தில் தலைமை செயலகம் வந்தபோது, எந்த பிரச்னையும் ஏற்படவில்லை. ஆனால், தேர்தல் பரப்புரையில் மட்டும் பெரிய அளவிலான பிரச்னைகள் ஏற்படுகிறது என்றால் சீன் கிரியேட் பண்ணுகிறார் என்று தான் அர்த்தம். இதனை ஏதோ ஒரு கம்பெனி அவருக்காக செய்து கொடுக்கிறது.

தமிழக அரசியலில் நீர்க்குமிழியாக மட்டுமே நடிகர் விஜய் இருப்பார். நீர்க்குமிழி தோன்றும் போது அழகாக இருக்கும். ஆனால், ஓரிரு நிமிடங்களிலேயே அது மறைந்து போகும். இந்த தேர்தலில் தவெக முழுமையாக தோற்கடிக்கப்படும். தமிழக அரசியலில் விஜயால் நிரந்தரமான இடத்தை பிடிக்க முடியாது. தமிழக மக்கள் முன்னேற்றத்திற்கான எந்தவொரு மாற்று திட்டத்தையும் சொல்லத் தெரியாத விஜய், திமுக ஒரு தீய சக்தி என பஞ்ச் டயலாக் மட்டுமே பேசுகிறார். இவரை அவர் ரசிகர்கள் கண்ணை மூடிக்கொண்டு வெறித்தனமாக ஆதரிப்பது மிகவும் ஆபத்தானது. தமிழகத்தில் புறக்கணிக்க வேண்டிய சக்தியாக விஜய் உள்ளார்.

அதேபோல விவசாயிகள், இஸ்லாமியர்கள், பொதுமக்கள் என பாஜக அரசு கொண்டு வந்த மக்கள் விரோத திட்டங்களுக்கு அதிமுக ஆதரவளித்ததின் விளைவாக இன்று விவசாயிகளும் பொதுமக்களும் துன்பத்திற்கு ஆளாகியுள்ளனர். பாஜகவோடு சேர்ந்து கொண்டு தமிழகத்திற்கு எடப்பாடி பழனிச்சாமி தீங்கு விளைவித்து வருகிறார். பதவி ஆசையில் சுயநலத்தோடு செயல்பட்டு வரும் எடப்பாடி பழனிச்சாமியை மக்கள் புறக்கணிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

தொடர்ந்து பேசிய அவர் திமுக தேர்தல் அறிக்கை, டாப் ஸ்டார் ஆக உள்ளது. விவசாயிகளுக்கு மீட்டர் இல்லாத மின் இணைப்பு காலை உணவு திட்டம் எட்டாம் வகுப்பு வரை விரிவாக்கம் இல்லத்தரசிகளுக்கு வீட்டுக்கு தேவையான மின்சாதன பொருட்கள் வாங்க 8,000 டோக்கன் என பல்வேறு திட்டங்கள் மக்களை கவர்ந்துள்ளது. தேர்தல் அறிக்கை என்பது ஒரு சடங்காக இல்லாமல் தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு பெரும் பயனாக அமைந்துள்ளது. எனவே திமுக கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து மக்கள் வாக்களித்து தமிழக முதல்வராக ஸ்டாலினை மீண்டும் அமர்த்த வேண்டும் என்று சண்முகம் கேட்டுக் கொண்டார்.

இதனை தொடர்ந்து, தமிழக சுற்றுலாத்துறை அமைச்சரும், சேலம் வடக்கு தொகுதி திமுக வேட்பாளருமான ராஜேந்திரன் பேசும்போது, இந்த தேர்தல் தமிழ்நாட்டுக்கும் டெல்லிக்கும் நடக்கும் சட்டப்பேரவை தேர்தலாகும் மதவெறிக்கும் மதசார்பின்மைக்கும் நடக்கும் தேர்தலாகும். எடப்பாடி பழனிச்சாமி தலைமையில் மதவெறி கொண்டவர்கள் ஒரு அணியாகவும், திமுக தலைவர் ஸ்டாலின் தலைமையில் மதசார்பின்மை கொண்டவர்கள் ஒரு அணியாகவும் நிற்கிறோம் ஆர்எஸ்எஸ், விஸ்வ ஹிந்து பரிஷத் போன்ற சக்திகளின் சூழ்ச்சியை வீழ்த்தி இந்த தேர்தலில் அபார வெற்றியை அடைய உள்ளோம்.

முதலமைச்சர் வெளியிட்டுள்ள தேர்தல் அறிக்கை டாப் ஸ்டார் அறிக்கை ஆகும்.

அடுத்த ஐந்தாண்டு கால ஆட்சியில் 50 லட்சம் பேருக்கு வேலைவாய்ப்பை ஏற்படுத்தி தருவதாக முதலமைச்சர் உறுதியளித்துள்ளார். எனது கடந்த ஐந்து ஆண்டுகால ஆட்சியில் இந்தியாவே போற்றும் வகையில் பல்வேறு சாதனை திட்டங்களை நிறைவேற்றித் தந்த, திமுக கூட்டணிக்கு ஆதரவளித்து, வெற்றி பெற செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

தமிழக அரசியலில் நீர்க்குமிழியாக மட்டுமே நடிகர் விஜய் இருப்பார் என சேலத்தில் நடந்த திமுக கூட்டணி கட்சியின் தேர்தல் பரப்புரை பொதுக்கூட்டத்தில் மார்க்சிஸ்ட் கம்யூ., கட்சியின் மாநில செயலாளர் சண்முகம் பேசினார்.

# 100 சதவீதம் வாக்களிப்போம்: விழிப்புணர்வு யோகாசனம்

வந்தவாசி, ஏப் 04:

திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி ஸ்ரீ கிருஷ்ணா கல்வி மையத்தில் 100 சதவீத வாக்குப்பதிவை வலியுறுத்தி யோகாசன விழிப்புணர்வு நிகழ்ச்சி



நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் குளோபல் அபாகஸ் அகாடமி மாணவர்கள் பங்கேற்று யோகாசன விழிப்புணர்வில் 100 சதவீதம் வாக்களிக்க வலியுறுத்தி விழிப்புணர்வு ஆசனங்களை மேற்கொண்டனர். இந்த நிகழ்வில் ஸ்ரீ கிருஷ்ணா கல்வி மைய முதல்வர் பா.சீனிவாசன், நகராட்சி தூய்மை திட்ட ஒருங்கிணைப்பாளர் பழனி, நல்நூலகர் ஜா.தமீம், ரெட் கிராஸ் சங்க உறுப்பினர் ஜி.விநாயக மூர்த்தி, ஆசிரியர் மகாவீர் ஆகியோர் பங்கேற்று கருத்துக்களை வழங்கினர். நிகழ்வில் யோகா விழிப்புணர்வு செய்த மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது. இறுதியில் அகாடமி ஆசிரியை ம.உஷா நன்றி கூறினார்.

# கோவை அரசு மருத்துவமனைக்கு ஏர்கூலர் வழங்கிய ஆகாஷ் லயன்ஸ் சங்கம் 3242 சி!!




கோவை: மார்ச்04

ஆகாஷ் லயன்ஸ் சங்கம் 3242 சி சார்பில் சங்கத்தின் தலைவர் லயன் சசிகுமார் தலைமையில் செயலாளர் மணிகண்டன் பொருளாளர் குணசேகரன் முன்னாள் தலைவர் முத்துசாமி முன்னிலையில் கோவை அரசு மருத்துவமனை தலைமை செவிலியர் கண்காணிப்பாளர்கள் ப்ரீத்தா ரங்கநாயகி ஜானகி சுதா இவர்களிடம் பன்னாட்டு லயன்ஸ் இயக்கம் 3242 சி மாவட்டத்தின் ஜி எல் டி ஒருங்கிணைப்பாளர் லயன் பாஸ்கர் ஜி எஸ் டி ஒருங்கிணைப்பாளர் லயன் செந்தில்குமார் இணைந்து ஏர் கூலர் வழங்கினார்கள்.

உடன் லயன் ஜெயராம், லயன் பிரபுராம், சிவில் இன்ஜினியர் மணிகண்டன், ஜெயபிரகாஷ் அரசு மருத்துவமனை செவிலியர் கண்காணிப்பாளர்கள் ராதாமணி தேன்மொழி சுகந்தி குரூஸ் மேரி அமுதவல்லி பெரியநாயகி அமுதரசு முருகப்பெருமாள் ஆகியோர் உடன் இருந்தனர்.

## ரோட்டரி கிளப் ஆஃப் கோயம்புத்தூர் அறம் சார்பாக "சூப்பர் ஓவர் - சீசன் 2" கிரிக்கெட் போட்டி

# நட்பு, உடல்நலம் மற்றும் கிரிக்கெட் மீது உள்ள ஆர்வத்தை வெளிப்படுத்தும் வகையில் நடைபெற்ற இதில் ரொட்டேரியன்கள் ஆர்வமுடன் பங்கேற்பு!!




கோவை: ஏப்04

ரோட்டரி கிளப் ஆஃப் கோயம்புத்தூர் அறம் மற்றும் ரிவர்சைடு பப்ளிக் ஸ்கூல் இணைந்து நடத்திய "சூப்பர் ஓவர் – சீசன் 2" கிரிக்கெட் போட்டி கோவை நவ இந்தியா பகுதியில் உள்ள எஸ்.என்.ஆர்.கிரிக்கெட் மைதானத்தில் நடைபெற்றதுஞ்

40 வயதுக்கு மேற்பட்ட ரோட்டேரியன்கள் கலந்து கொண்ட இந்த போட்டி, நட்பு, உடல்நலம் மற்றும் கிரிக்கெட் மீது உள்ள ஆர்வத்தை வெளிப்படுத்தும் வகையில் சிறப்பாக அமைந்தது.

"ஐஸ்வர்யம் ஃபைனான்ஷியல் சர்வீசஸ் கப்" ஆதரவுடன் நடைபெற்ற இந்த போட்டி துவக்க விழா, மாவட்ட ஆளுநர் செல்லா கே. ராகவேந்திரன் தலைமையில் நடைபெற்றது.

ரோட்டரி கிளப் ஆப் கோயம்புத்தூர் அறம் தலைவர் கே.ஜி.ஸ்ரீராம், செயலாளர் ரஜீல் அப்துல் ரஹ்மான், கோவை மாவட்ட கிரிக்கெட் சங்கத்தின் செயலாளர் ஆர்.சந்திரமௌலி, ஆகியோர் முன்னிலை வகித்தனர்..

இதில் முக்கிய விருந்தினர்களாக ஜிழிசிகி தலைவர் டி.ஜே. ஸ்ரீனிவாசராஜ், செயலாளர் யு. பகவந்தாஸ் ராவ், முன்னாள் செயலாளர் ஆர்.ஐ. பழனி மற்றும் ஷிழிஸி குழும டிரஸ்டி சுந்தர் ராமகிருஷ்ணன் ஆகியோர் கலந்து கொண்டு போட்டியை சிறப்பித்தனர்.

மனிதநேய நோக்கத்துடன் நடைபெற்ற இந்த போட்டியின் மூலம் திரட்டப்பட்ட நிதி சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை மேற்கொள்ளும் நோயாளிகளுக்கு உதவியாக வழங்கப்படும் என போட்டி ஒருங்கிணைப்பாளர்கள் தெரிவித்தனர்..

சூப்பர் ஹீரோஸ் சேலஞ்ச்" போட்டியாக நடைபெற்ற இதில் வெற்றி பெற்ற அணிகள் மற்றும் சிறந்த வீரர்களுக்கு பரிசுகள், கோப்பைகள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கி கவுரவிக்கப்பட்டது,

**FORMAT-C-1**

**DECLARATION ABOUT CRIMINAL CASES**

As per the judgement dated 25*th* September, 2018 of Hon'ble Supreme Court in wp (civil) No. 536 of 2011

| | | |
|---|---|---|
| Name and address of candidate | : | **S. SHAKUL HAMED**<br>No 1. Main Road Pargoor<br>Puducherry. |
| Name of political party | : | Independent |
| Name of Election | : | Puducherry Assembly - 2026<br>General Election. |
| Name of constitvency | : | VILLIANUR |

I. S.SHAKUL HAMED, a candidate for the above mentioned Election, declare for public information the following details about my Criminal Antecedents:

(A) Pending Criminal cases

| S1 NO | Name of court | Case No and dated | Status of care(s) | Section 10 of Acts concerned and brief description of Offence (s) |
|---|---|---|---|---|
| 1. | NIL | 30/2024<br>03.02.2024 | Case charged and same was yet to be taken court | v/s 509 IPC<br>r/w.34 |

# கதிர்காமம் தொகுதி சண்முகாபுரத்தில் திமுக வேட்பாளர் வடிவேல் தீவிர வாக்கு சேகரிப்பு





புதுச்சேரி , ஏப்.4–

புதுச்சேரியில் நடைபெறவுள்ள சட்டமன்றத் தேர்தலை முன்னிட்டு, அரசியல் களம் சூடுபிடிக்கத் தொடங்கியுள்ளது. இதன் ஒரு பகுதியாக, கதிர்காமம் தொகுதிக்குட்பட்ட சண்முகாபுரத்தில் திமுக வேட்பாளர் வடிவேல் இன்று வீடு வீடாகச் சென்று தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார்.

வாக்கு சேகரிப்பின் போது, அப்பகுதி திமுக பிரமுகர் ஏகராஜன் தலைமையில் இளைஞர் படையுடன் வேட்பாளர் வடிவேலுக்கு மாலை அணிவித்து உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது. இந்த நிகழ்வில் ஏராளமான பெண்கள், திமுக தொண்டர்கள் மற்றும் நிர்வாகிகள் கலந்து கொண்டு தங்கள் ஆதரவைத் தெரிவித்தனர்.

பொதுமக்களிடையே உரையாற்றிய வேட்பாளர் வடிவேல் பல்வேறு வாக்குறுதிகளை வழங்கினார்

வெற்றி பெற்றால் தொகுதிக்குத் தேவையான அனைத்து அடிப்படை வசதிகளும் முன்னுரிமை அடிப்படையில் செய்து தரப்படும். இளைஞர்களுக்குப் புதிய வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படும்.

தடையில்லா மின்சாரம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் வீடற்ற ஏழை மக்களுக்கு இலவச மனைப் பட்டா பெற்றுத் தரப்படும்.

திரளான பொது மக்கள் மத்தியில் நடைபெற்ற இந்த வாக்கு சேகரிப்பு நிகழ்வு, தொகுதியில் பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது.

# வில்லியனூர் தொகுதி: ஜக்கு சின்னத்திற்கு ஆதரவு கோரி ரவிக்குமார் தீவிர வாக்கு சேகரிப்பு!





புதுச்சேரி சட்டப்பேரவைத் தேர்தலை முன்னிட்டு, வில்லியனூர் தொகுதியின் என்.ஆர். காங்கிரஸ் (கிமிழிஸிசி) வேட்பாளர் ரவிக்குமார், இன்று தொகுதிக்குட்பட்ட பல்வேறு பகுதிகளில் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார்.

வில்லியனூர் மற்றும் அரும்பாத்தபுரம் உள்ளிட்ட முக்கியப் பகுதிகளில் வீடு வீடாகச் சென்று அவர் வாக்கு கேட்டார். செல்லும் வழியெங்கும் கட்சித் தொண்டர்கள் மற்றும் பொதுமக்கள் அவருக்கு மலர் மாலைகள் அணிவித்தும், பெண்கள் ஆரத்தி எடுத்தும் உற்சாக வரவேற்பு அளித்தனர்.

வாக்கு சேகரிப்பின் போது வேட்பாளர் ரவிக்குமார் மக்களிடம் பேசுகையில்:

"தொகுதியின் வளர்ச்சிக்கும், மக்களின் நலனுக்கும் அனைவரும் வரும் தேர்தலில் தவறாமல் 'ஜக்கு' சின்னத்திற்கு வாக்களித்து என்னை வெற்றி பெறச் செய்ய வேண்டும்," என்று கேட்டுக் கொண்டார்.

இதற்கு பதிலளித்த அப்பகுதி மக்கள், "வில்லியனூர் தொகுதியில் நிச்சயம் ஒரு மாற்றம் தேவை என்பதை நாங்கள் உணர்ந்துள்ளோம். இம்முறை அந்த மாற்றத்தை மக்கள் ஏற்படுத்துவார்கள்," என அவரிடம் நம்பிக்கை தெரிவித்தனர்.

திரளான தொண்டர்கள் புடைசூழ நடைபெற்ற இந்த பிரசாரம், தொகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

## திண்டிவனம் அருகே கிணற்றில் குளிக்கச் சென்ற இரண்டு சிறுமிகள் தவறி விழுந்து நீரில் மூழ்கி உயிரிழப்பு

திண்டிவனம்: ஏப்.4–

திண்டிவனம் அருகே கிணற்றில் குளிக்கச் சென்ற இரண்டு சிறுமிகள் தவறி விழுந்து நீரில் மூழ்கி உயிரிழந்தனர். கிணற்றில் தவறி விழுந்த திவ்யா (13), கவுசல்யா (15) ஆகியோர் நீரில் மூழ்கி சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர்



திருச்சி மாவட்டம் மணப்பாறை சட்டப் பேரவை தொகுதி தமிழக வெற்றிக்கழக வேட்பாளர் ஆர் கதிரவன் இன்று காலை 10.30 மணிக்கு வேட்பு மனு தாக்கல்

தவெக தொண்டர்கள் திரளாக வருகை தரும்படி மாவட்ட செயலாளரும் வேட்பாளருமான ஆர் கதிரவன் நிர்வாகிகள் மற்றும் தொண்டர்களுக்கு அழைப்பு விடுத்துள்ளார்



திருச்சிராப்பள்ளி மாவட்டம், அந்தநல்லூர் ஊராட்சி ஒன்றியம், செந்துறை ஊராட்சியில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் சார்பில் நிலா ஆடும் முன்றில் என்னும் முழு நிலவு பெருவிழா தேர்வு விழிப்புணர்வு நிகழ்ச்சியில் மகளிர் சுய உதவிக்குழுவினர்கள் வண்ணகோலமிட்டு அகல் விளக்கு தீபங்கள் ஏற்றி மெழுகு வர்த்தி ஏந்தியும், வாக்காளர் உறுதிமொழி ஏற்றி நாதஸ்வர இசை அமைத்தும், கும்மி பாட்டு பாடி நடனம் ஆடியும், வாக்காளர்களுக்கு வீடுதோறும் தேர்தல் அழைப்பிதழ் வழங்கி நிலாச்சோறு போன்ற தேர்தல் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தினர்.

# சேலத்தில் இபிஎஸ்'யை சந்தித்த வேட்பாளர்கள்.

சேலம். ஏப்.4–

சேலம் நெடுஞ்சாலை நகர் இல்லத்தில் எடப்பாடி கே.பழனிசாமியை அதிமுக,அதன் கூட்டணி கட்சி வேட்பாளர்கள், முன்னாள் அமைச்சர்கள் சந்தித்து பேசினர்.

அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி கே. பழனிசாமியை சேலம் மாவட்டத்தில் போட்டியிடும் பாமக வேட்பாளர்களான சேலம் வடக்கு தொகுதி சதாசிவம், மேற்கு தொகுதி கார்த்தி ஆகியோர் சந்தித்தனர். இதையடுத்து தெற்கு தொகுதி அதிமுக வேட்பாளர் ஜெ. வினோத், மாவட்ட பொறுப்பாளர்கள் , மாநகர நிர்வாகிகளுடன் எடப்பாடி கே. பழனிசாமியை சந்தித்துப் பேசினார். மேட்டூர் தொகுதி வேட்பாளர் வெங்கடாசலம் நிர்வாகிகளுடன் வந்து எடப்பாடி கே. பழனிசாமியை சந்தித்தார்.

பின்னர், சேலம் வடக்கு தொகுதி பாமக வேட்பாளர் மு. கார்த்தி செய்தியாளர்களிடம் பேசுகையில், வரும் தேர்தலில் எடப்பாடி தலைமையில் தேசிய ஜனநாயக கூட்டணி நிச்சயம் வெற்றி பெறும். பாமக பொறுத்தவரை அன்புமணி தலைமையில்தான் செயல்படுகிறது. வேறு கட்சி கிடையாது. தமிழகம் முழுவதும் அதிமுக கூட்டணி வேட்பாளர்கள் வெற்றி பெறுவார்கள் என்றார்.

முன்னாள் அமைச்சர்கள் சந்திப்பு: முன்னாள் அமைச்சர்களான கரூர் எம்.ஆர். விஜயபாஸ்கர், ஈரோடு கருப்பண்ணன் மற்றும் அமமுக மாநில பொருளாளர் எஸ்.கே. செல்வம் உள்ளிட்ட நிர்வாகிகளும் எடப்பாடி கே. பழனிசாமியை சந்தித்து பேசினர்.

அதிமுகவில் இணைந்த மாற்றுக்கட்சியினர்: தொடர்ந்து முன்னாள் அமைச்சர் கே.சி. கருப்பண்ணன் ஏற்பாட்டில் திமுகவை சேர்ந்த பவானி மத்திய ஒன்றிய செயலாளர் கா.சு. மகேந்திரன், அவைத் தலைவர் தட்சிணாமூர்த்தி, பவானி வடக்கு திமுக விவசாய அணி அமைப்பாளர் அருணாச்சலம் மற்றும் தவெக நிர்வாகிகள் 50 க்கும் மேற்பட்டோர் எடப்பாடி கே.பழனிசாமி முன்னிலையில் அதிமுகவில் இணைந்தனர்.

# திருவள்ளூர் ஒருங்கிணைந்த நீதிமன்றத்திற்கு வெடிகுண்டு மிரட்டலால் பரபரப்பு :

## போலீசார் மோப்ப நாயுடன் தீவிர சோதனை

திருவள்ளூர் ஏப் 04 :

திருவள்ளூர் ஒருங்கிணைந்த நீதிமன்றத்தில் வெடிகுண்டு வைத்துள்ளதாக இமெயில் மூலமாக தகவல் வந்தது. இதையடுத்து மாவட்ட காவல் கண்காணிப்பாளர் விவேகானந்தா சுக்லா உத்தரவின்பேரில் வெடிகுண்டு நிபுணர்களான நாகேஷ் , ஆல்பர்ட் ரைட், பிரபாகரன் மற்றும்



ஹல்க் மோப்ப நாயுடன் விரைந்து வந்து நீதிமன்றம் வளாகம் முழுவதும் தீவிர சோதனை மேற்கொண்டனர்.

அதைத்தொடர்ந்து அந்த வளாகத்தில் ஒன்றும் இல்லாததை தொடர்ந்து புரளி என தெரியவந்தது. ஏற்கெனவே இதேபோல் இந்த வளாகத்திற்கு 4 ஆவது முறையாக வெடிகுண்டு மிரட்டல் விடுக்கட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. இந்த நிலையில் இமெயிலில் வெடிகுண்டு வைத்துள்ளதாக யார்? எங்கிருந்து? அனுப்பியுள்ளார் கள் என்பது குறித்து நுண்ணறிவு பிரிவு போலீஸார் தீவிரமாக விசாரணை செய்து வருகின்றனர்.

தேர்தல் நேரத்தில் இது போன்ற சம்பவங்களில் ஈடுபடுபவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதே சமூக ஆர்வலர்களின் கோரிக்கையாக உள்ளது.

# திருவள்ளூரில் 100 சதவிகித வாக்குப்பதிவை வலியுறுத்தி தேர்தல் விழிப்புணர்வு ஆட்டோ பேரணி : மாவட்ட தேர்தல் அலுவலர் மு.பிரதாப் துவக்கி வைத்தார் :




திருவள்ளூர் ஏப் 04 :

திருவள்ளூர் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் "தேர்தல் திருவிழா தமிழ்நாட்டின் பெருவிழா" சட்டமன்ற பொதுத் தேர்தலை முன்னிட்டு 100 சதவிகித வாக்குப்பதிவை வலியுறுத்தி மாவட்ட தேர்தல் அலுவலரும் மாவட்ட ஆட்சியருமான மாவட்ட ஆட்சியர் மு.பிரதாப் 230க்கும் மேற்பட்ட ஆட்டோக்களில் தேர்தல் விழிப்புணர்வு வாசகங்கள் அடங்கிய ஒட்டு வில்லைகளை ஒட்டி விழிப்புணர்வு ஏற்படுத்தினார்.

அதனைத் தொடர்ந்து தேர்தல் விழிப்புணர்வு ஆட்டோ பேரணியை கொடியசைத்து துவக்கி வைத்து, விழிப்புணர்வு ஏற்படுத்தினார். இப்பேரணியில் 230க்கும் மேற்பட்ட ஆட்டோ ஓட்டுநர்கள் 150க்கும் மேற்பட்ட அலுவலர்கள் கலந்து கொண்டு வட்டாரப் போக்குவரத்து அலுவலம் முதல் இரயில் நிலையம் வரை பேரணியாகச் சென்று பொதுமக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்தினர்.

இதில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநரும் இணை இயக்குநருமான வை.ஜெயக்குமார், இணை போக்குவரத்து ஆணையர் பி.சுரேஷ், வட்டாரப் போக்குவரத்து அலுவலர்கள் என். ராமகிருஷ்ணன் (திரு வள்ளூர்), வி. சிவானந்தம் (செங்குன்றம்), யு.ரவிகுமார் (பூவிருந்தவல்லி), திருவள்ளூர் நகராட்சி ஆணையர் தாமோதரன், மோட்டார் வாகன ஆய்வாளர்கள் ராஜசேகரன் (திருத்தணி), ரமேஷ் (கும்மிடிப்பூண்டி) மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## ஈரோடு மேற்கு தொகுதி திமுக தேர்தல் பிரச்சாரம்..

# வேட்பாளர் அமைச்சர் சு. முத்துசாமிக்கு ஆதரவு தெரிவித்த மாற்றுத் திறனாளி பெண்மணி..



ஈரோடு. ஏப்ரல் 04

ஈரோடு மேற்கு தொகுதி திமுக வேட்பாளராக போட்டியிடும் அமைச்சர் முத்துசாமி தீவிர தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டு வருகிறார்.

ஈரோடு மாவட்டம் ஈரோடு மேற்கு சட்டமன்றத் தொகுதிக்கு மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் சார்பில் போட்டியிடும் திமுக வேட்பாளர் அமைச்சர் சு. முத்துசாமி காலை 7 மணி முதல் இரவு வரை தீவிர தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டு வருகிறார்.

தொடர்ந்து தொகுதி முழுவதும் பொது மக்களும் வாக்காளர்களும் அவருக்கு ஆரத்தி எடுத்து வரவேற்பு வழங்கி தங்களின் ஆதரவுகளை தெரிவித்து வருகின்றனர்.

இந்த நிலையில் நேற்று ஈரோடு மேற்கு தொகுதிக்கு உட்பட்ட, நெசவாளர் காலனி பகுதியில் அவர் கட்சியினருடன் தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டிருந்தார்.

அப்போது அங்கு அவருக்கு திரளான பொதுமக்கள் ஆரத்தி எடுத்து வரவேற்றனர். அப்போது அங்கு இருந்த ஒரு மாற்று திறனாளி பெண்மணி தனது மூன்று சக்கர வண்டியில் அமர்ந்தபடி திமுக வேட்பாளர் அமைச்சர் முத்துசாமியை அருகில் அழைத்து, அன்போடு வாழ்த்து கூறி தனது ஆதரவை தெரிவித்தார்.

இந்த நிகழ்வு அப்பகுதியில் உள்ள மக்களிடையே ஒரு நெகிழ்சியை ஏற்படுத்தியது.

# எல்.பி.ஜி கேஸ் தட்டுபாடு காரணமாக டைல்ஸ் தொழில் பாதிக்கப்பட்டுள்ளது

## கோவை டைல்ஸ் டீலர்ஸ் சங்கத்தின் தலைவர் சுரபி பங்கஜ்




கோவை :ஏப்04

எல்.பி.ஜி கேஸ் தட்டுபாடு காரணமாக டைல்ஸ் தொழில் பாதிக்கப் பட்டுள்ளதாகவும் உற்பத்தி மற்றும் வரத்து குறைவால் வரும் நாட்களில் டைல்ஸ் தட்டுபாடு எற்படும் அபாயம் ஏற்படுவதாகவும் கோவை டைல்ஸ் டீலர்ஸ் சங்கத்தின் தலைவர் சுரபி பங்கஜ் தெரிவித்துள்ளார்.

கோவையில் பந்தைய சாலையில் உள்ள சீமா அலுவலகத்தில் கோயமுத்தூர் டைல்ஸ் டீலர்ஸ் சங்கத்தின் ஆலோசனை கூட்டம் நடைப்பெற்றது. இக்கூட்டத்திற்கு பின் செய்தியாளர்களை சந்தித்த சங்கத்தின் தலைவர் சுரபி பங்கஜ் அவர்கள், ஈரான் போர் பதற்றத்தால் ஏற்பட்டுள்ள எல்.பி.ஜி கேஸ் தட்டுபாட்டால் டைல்ஸ் உற்பத்தி பெருமளவு பாதிக்கப் பட்டுள்ளதாகவும் உற்பத்தி மற்றும் வரத்து குறைவால் தொழில் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது மட்டுமல்லாமல் அத் தொழிலை நம்பியுள்ள தொழிலாளர்களும் வேலை இழக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளதாகவும் அவர் வேதனை தெரிவித்தார். இதனால் கூடிய விரைவில் டைல்ஸ் விலை 30 % வரை விலை ஏற்றத்திற்கஆன வாய்ப்பு இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

எனவே அரசு எல்.பி.ஜி தட்டுபாட்டை போக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அவர் கோரிக்கை விடுத்தார்.





## வேட்பாளர் அறிமுகம்

பெயர்= **எஸ்.கிருத்திகா சிவக்குமார்.**
பிறந்த தேதி= 25/1/ 1986.
கணவர் பெயர்= டாக்டர் சி. சிவ்குமார் எம்பிபிஎஸ்,, எம் பி ஏ.
ஜாதி= இந்து கொங்கு வேளாளர்.
கல்வி தகுதி = பி .இ. எம். பி. ஏ.
வயது=40
மகன்கள்=
ஆரியன், அர்ஜூன்.



கட்சியில் தற்போது மாநில பிஜேபி தன்னார்வ தொண்டு நிறுவன மாநில செயலாளர்.

மாமியார் = தற்போதைய மொடக் குறிச்சி தொகுதியின் பாஜக எம்எல்ஏவாக உள்ளார்.

தற்போது மொடக்குறிச்சி தொகுதியின் பாஜக எம்எல்ஏவாக இருக்கும் டாக்டர் சி. சரஸ்வதி அவர்களுக்கு தொகுதி முழுவதும் நல்ல அறிமுகவும் செல்வாக்கும் உள்ளது.

மேலும் கடந்த ஐந்து ஆண்டுகளில் தொகுதிக்கு பல்வேறு நலத்திட்டங்கள் கொண்டு வந்து செயல்படுத்தியவர் என பொதுமக்களால் பெரிதும் பாராட்டப்படுபவர் எம்எல்ஏ டாக்டர் சரஸ்வதி அவர்கள்.

இப்போது மொடக்குறிச்சி தொகுதிக்கு பாஜக வேட்பாளராக அவரது மருமகள் கிருத்திகா சிவக்குமார் பாஜக வேட்பாளராக அறிவிக்கப்பட்டு நிறுத்தப்பட்டுள்ளார்.

கல்வி நிறுவனங்கள் மற்றும் அறம் அறக் கட்டளை மூலம் மக்களுக்கு கிருத்திகா சிவ்குமார் பல்வேறு நலத்திட்ட உதவிகளை செய்து வந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

இத்தகைய காரணங்களால் இவருக்கு வெற்றி வாய்ப்பு அதிகம் உள்ளதாக தொகுதி மக்கள் கருத்து தெரிவித்தனர்.



திருச்சி மாவட்டம் மணப்பாறை சட்டமன்ற தொகுதி அதிமுக வேட்பாளர் டாக்டர் பி எல் விஜயகுமார் அவர்களை ஆதரித்து மணப்பாறை தெற்கு ஒன்றிம் சார்பில் வேட்பாளர் அறிமுக கூட்டம் மற்றும் செயல்வீரர்கள் கூட்டம் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் தேர்தல் மேற்பார்வையாளருமான டி.ரத்தினவேல் தலைமையில் நடைபெற்றது. இதில் முன்னாள் எம்எல்ஏக்கள் ஆர் சந்திரசேகர் செ சின்னசாமி வையம்பட்டி ஒன்றிய கழக செயலாளர் சேதுமணப்பாறை ஒன்றிய செயலாளர் அன்பரசன் பொதுக்குழு உறுப்பினர் முகமது இஸ்மாயில் உள்ளிட்ட அதிமுக மற்றும் கூட்டணி கட்சிகளைச் சேர்ந்த நிர்வாகிகள் தொண்டர்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

## காங்கிரஸ் வேட்பாளர் பட்டியல் வெளியீடு ஸ்ரீபெரும்புதூரில் செல்வப்பெருந்தகை போட்டி



சென்னை: ஏப்.4

தமிழகசட்டப்பேரவைத்தேர்தலுக்கான காங்கிரஸ் வேட்பாளர்கள் பட்டியல் அறிவிக்கப்பட்டுள்ளது. கட்சியின் மாநில தலைவரான செல்வப்பெருந்தகை ஸ்ரீபெரும்புதூர் தொகுதியில் போட்டியிடுகிறார்.

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலுக்கான காங்கிரஸ் வேட்பாளர்கள் பட்டியலை அக்கட்சியின் அகில இந்திய அமைப்பு பொதுச் செயலாளர் கே.சி. வேணுகோபால் வெளியிட்டுள்ளார். அதன்படி, பொன்னேரி (தனி) தொகுதியில் துரை சந்திரசேகர், வேளச்சேரியில் ஆசன் மவுலானா, ஸ்ரீபெரும்புதூரில் (தனி) செல்வப்பெருந்தகை ஆகியோர் போட்டியிடுகின்றனர்.

சோளிங்கரில் ஏ.எம். முனிரத்தினம், ஊத்தங்கரையில் (தனி) குப்புசாமி, கிருஷ்ணகிரியில் செல்ல குமார், பென்னாகரத்தில் ஜி.கே.எம். தமிழ் குமரன், ஆத்தூரில் (தனி) எஸ்.கே. அர்த்தனாரி, ஈரோடு (கிழக்கு) தொகுதியில் கோபிநாத் பழனியப்பன், உதகமண்டலத்தில் பி. ராமச்சந்திரன் ஆகியோர் போட்டியிடுகின்றனர்.

கவுண்டம்பாளையத்தில் சூர்ய பிரகாஷ், சிங்காநல்லூரில் ஸ்ரீநிதி நாயுடு, துறையூரில் (தனி) விச்சு லெனின் பிரசாத், கடலூரில் சந்திரசேகரன், மைலாடுதுறையில் ஜமால் யூனுஸ் முகம்மது ஆகியோர் வேட்பாளர்களாக நிறுத்தப்பட்டுள்ளனர்.

அறந்தாங்கியில் டி. ராமச்சந்திரன், காரைக்குடியில் எஸ். மாங்குடி, உசிலம்பட்டியில் டி. சரவணகுமார், சிவகாசியில் கணேசன் அசோகன், திருவாடானையில் ராம கரு மாணிக்கம், ஸ்ரீவைகுண்டம் தொகுதியில் ஊர்வசி அமிர்தராஜ் ஆகியோர் போட்டியிடுகின்றனர். சங்கரன்கோவில் (தனி) தொகுதியில் சங்கை கணேசன், அம்பாசமுத்திரத்தில் வி.பி. துரை, நாங்குநேரியில் ரூபி மனோகரன், கொளச்சல் தொகுதியில் தங்கை கத்பெர்ட், விளவங்கோடு தொகுதியில் டி.டி. பிரவீண், கிள்ளியூரில் ராஜேஷ் குமார் ஆகியோர் போட்டியிடுகின்றனர்.

### ஈரோடு மேற்கு தொகுதி தேர்தல் பிரச்சாரம்..

# தன்னிடம் குறைகளை முறையிட்ட மூதாட்டியிடம் கருணை காட்டிய திமுக வேட்பாளர் சு. முத்துசாமி..

ஈரோடு. ஏப்ரல். 04

ஈரோடு மேற்கு தொகுதியில் நடைபெற்ற தேர்தல் பிரச்சாரத்தின் போது தன்னிடம் குறைகளை சொல்லி முறையிட்ட மூதாட்டி இடம் கருணையோடு விசாரித்து உதவிய ஈரோடு மேற்கு தொகுதி திமுக வேட்பாளர் அமைச்சர் சு. முத்துசாமி.



இந்த மாதம் 23ஆம் தேதி நடைபெற இருக்கின்ற தமிழ்நாடு சட்டமன்ற பொது தேர்தல் களம் சூடு முடிக்கப்பட்டு விறுவிறுப்பாக உள்ளது.

அரசியல் கட்சிகள் தங்களுடைய வேட்பாளர்களை அறிவித்து அவர்களும் தேர்தல் பிரச்சாரத்தில் தீவிரம் காட்டி வருகின்றனர்.

இந்த நிலையில் ஈரோடு மாவட்டம் ஈரோடு மேற்கு தொகுதி திமுக வேட்பாளராக, அறிவிக்கப்பட்டுள்ள மதசார்பற்ற முற்போக்கு கூட்டணியில் வேட்பாளர் அமைச்சர் சு. முத்துசாமி தொகுதி முழுவதும் தீவிர தேர்தல் பிரச்சாரம் செய்து வருகிறார். நேற்று முன்தினம் காலை திமுக தலைவரும் முதலமைச்சர் ஆன மு க ஸ்டாலின் திங்கள் பகுதியில் ஈரோடு மாவட்டத்தில் உள்ள வேட்பாளர்களை அறிமுகப் படுத்தி வைத்து தேர்தல் பிரச்சாரம் செய்தார்.

அன்றைய தினமே ஈரோடு மேற்கு தொகுதி திமுக வேட் பாளராக போட்டியிடும் அமைச்சர் சு. தனது வேட்பு மனுவை கோட்டாட்சியர் சிந்துஜாவிடம் தாக்கல் செய்தார்கள். நேற்று காலை 7 மணி அளவில் சின்ன வலசு மாரியம்மன் கோவிலில் சாமி தரிசனம் செய்துவிட்டு அவர் தனது தேர்தல் பிரச்சாரத்தை தொடங்கினார்.

தொடர்ந்து வேட்பாளர் சு. முத்துசாமி, சின்ன வலசு மாரியம்மன் கோவில், பதினாறாம் நம்பர் ரோடு, முத்து மாரியம்மன் கோவில், க. வலசு வடக்கு இரண்டாவது வீதி மற்றும் மூன்றாவது வீதி, நான்காவது, வீதி, ஐயன் காடு, கொத்து காரன் தோட்டம், மல்லி நகர், நெசவாளர் காலனி, கந்தையன் தோட்டம் உள்ளிட்ட தொகுதி சார்ந்த பல்வேறு இடங்களில் திமுக வேட்பாளர் அமைச்சர் முத்துசாமி தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டார்.

பிரச்சாரத்தின் போது அவருக்கு தொகுதியை சேர்ந்த பொதுமக்கள் ஆரத்தி எடுத்து வரவேற்று ஆதரவு தெரிவித்தனர்.

பிரச்சார பயணத்தில் கட்சியின் முன்னணி நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

# ‘ஜனநாயகன்’ வெளியாவதை தடுக்க சூழ்ச்சி: திருச்சி கிழக்கில் மனுதாக்கல் செய்த விஜய் குற்றச்சாட்டு

திருச்சி. பிப். 4–

தவெக தலைவர் விஜய், சென்னை பெரம்பூர், திருச்சி கிழக்கு ஆகிய தொகுதிகளில் போட்டியிடுகிறார். ஏற்கெனவே பெரம்பூர் தொகுதியில் அவர் வேட்புமனு தாக்கல் செய்திருந்த நிலையில், திருச்சி கிழக்கு தொகுதியில் நேற்று பகல் 12.20 மணியளவில் தேர்தல் நடத்தும் அலுவலரும், மாநகராட்சி உதவி ஆணையருமான முத்து முருகேசபாண்டியிடம் தனது வேட்பு மனுவை தாக்கல் செய்தார்.

பின்னர், திருச்சி கிழக்கு தொகுதிக்குட்பட்ட மரக்கடை எம்ஜிஆர் சிலை முன்பு நடைபெற்ற தேர்தல் பிரச்சாரத்தில் விஜய் பேசியதாவது: தமிழகத்தில் காஸ் சிலிண்டர் பிரச்சினையால் ஏராளமான டீக்கடைகள், ஓட்டல்களை மூடிவிட்டனர். அவர்கள் (பாஜக) கொஞ்சம் உஷாராக இருந்திருந்தால் காஸ் தட்டுப்பாட்டை தவிர்திருக்கலாம். இவர்களாவது (திமுக) முன்னெச்சரிக்கையாக இருந்திருந்தால் காஸ் தட்டுப்பாட்டை கட்டுப்படுத்தி இருக்கலாம்.

இவர்கள் இருவரும்தான் (திமுகபாஜக) இதற்கு காரணம். இதுகுறித்து முதல்வர் ஸ்டாலினிடம் கேட்டால், நமக்கும் அதற்கும் சம்பந்தம் இல்லை என்பார். அவரது வீட்டில் ஒரு ரெய்டு, ஒரு பிரச்சினை என்றால் டெல்லிக்கு பறந்து சென்று வருவார். அதேபோல, இதற்கும் டெல்லிக்கு சென்றிருந்தால் பிரயோஜனமாக இருந்திருக்கும். எதையெல்லாம் செய்ய முடியாதோ, அதையெல்லாம் பொய் வாக்குறுதிகளாக கொடுத்து ஏமாற்றுவது தான் முதல்வரின் வேலை. தற்போது அடுத்த பொய் வாக்குறுதிகளை தயார் செய்துவிட்டார். ஆனால், நாங்கள் மக்களுக்கு என்ன தேவையோ, அதைத் தான் சொல்லுவோம்.

திருச்சியை சேர்ந்த ஒரு அமைச்சர், நகராட்சி துறையில் வேலைவாங்கித் தருவதாக கூறி கோடிக்கணக்கான ரூபாய் லஞ்சமாக வாங்கிவிட்டு, தகுதியானவர்களுக்கு வேலை கிடைக்காமல் செய்திருக்கிறார். இந்த ஒரு துறையில் மட்டும் ரூ.1,000 கோடி ஊழல் என்றால் மற்ற துறைகளை எடுத்து பார்த்தால் தலைசுற்றும். லட்சக்கணக்கான பேருக்கு வேலை கொடுப்பேன் என்றார்கள். அது என்னவானது என்று தெரியவில்லை. திமுகவில் வெறும் அறிவிப்புகள் மட்டுமே வெளியிடுகின்றனர். இதனால் எவ்வித பயனும் இல்லை. மொத்தத்தில் யூஸ்லெஸ் கவர்மென்ட்டாக உள்ளது.

கரூர் நிகழ்ச்சி சூழ்ச்சி என்று பலர் சொல்வதை போல, ஜனநாயகன் படத்துக்கு எதிராகவும் சூழ்ச்சி நடக்கிறது. ஜனநாயகன் திரைப்படம் வெளிவந்தால், என் மனதுக்கு நெருக்கமான உங்கள் எல்லோருடனும் எனக்கு இருக்கும் பூர்வ ஜென்ம பந்தத்தை அது இன்னமும் இறுக்கமாக மாற்றிவிடுமோ என்று சூழ்ச்சி செய்கின்றனர். நாம் நெருக்கமாகி ஜனநாயகன் திரைப்படம் இந்தத் தேர்தலில் தவெகவுக்கு மிகப்பெரிய ஆயுதமாக மாறிவிடுமோ என்பதால் படம் வெளியாவதை தடுக்க ஒரு கூட்டு சூழ்ச்சி நடக்கிறது. எனவே, உங்களுக்காக நீதி கேட்க வந்த எனக்கும் சேர்த்து நீதி வேண்டும்.

காங்கிரஸ் கட்சியில் உள்ள சிலரை திமுக பணப்பையில் போட்டுகொண்டதுடன், சிறுபான்மை மக்களை ஏமாற்ற பாதி கதர் கூட்டணியும், ‘மற்றும் பலர் கூட்டணியின்’ டெல்லி ஓனரோடு கொல்லைப்புறமாக கள்ள கூட்டணியும், அதாவது பாதி காவி கூட்டணியையும் திமுக அமைத்துள்ளது. ஆனால் கொள்கை என்று நம்மை ஏமாற்றுகின்றனர். திமுகவையும், பாஜகவையும் நம்பாதீர்கள். இவர்கள் இருவரும் வேறு வேறு கூட்டணி இல்லை. இவர்கள் ஒரே கூட்டணிதான். இவ்வாறு அவர் பேசினார்.

முன்னதாக மரக்கடை எம்ஜிஆர் சிலைக்கு விஜய் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். பேச்சின் இறுதியில், “நான் தன்னந்தனி ஆளு... நீ ஏளனமா பாரு.. கொஞ்சம் நகர்ந்தேன்னா இங்கு எட்டுகோடி பேரு.. மிரளபோகுது ஸ்டேட்டு.. எங்க விசிலு சத்தம் கேட்டு” என்று உற்சாகமாக பாட்டு பாடி தேர்தல் பிரச்சாரத்தை நிறைவு செய்தார்.

# திருவள்ளூரில் உள்ள ஜாமி ஆ மசூதியின் அட்ஹாக் கமிட்டி தலைவராக லஞ்சம் கொடுத்து பொறுப்பு வாங்கி தங்களை மிரட்டுவதாகவும், தங்கள் மீது பொய்யான புகார் அளிக்கும் திமுக மாவட்ட பிரதிநிதி மீது நடவடிக்கை எடுக்கக் கோரி எஸ்பியிடம் ஜமாத்தார்கள் புகார்

திருவள்ளூர் ஏப் 04 :

திருவள்ளூரில் உள்ள ஜாமி ஆ மசூதியில் திருவள்ளூர் மற்றும் சுற்றுவட்டார இஸ்லாமிய மக்கள் தொழுதும் பிரார்த்தனை செய்தும் வருகின்றனர். இந்த மசூதிக்கு 3 வருடத்திற்கு ஒரு முறை தேர்தல் நடைபெற்று நிர்வாகிகள் தேர்வு செய்யப்படுவது வழக்கம். இந்நிலையில் ஈக்காடு மக்கா நகர் ஜமாத்தச் சேர்ந்தவரும் திமுக நிர்வாகியுமான கே. முகமது ரஃபி என்பவர் பைனான்ஸ் தொழில், இரிடியம் மோசடி கட்டபஞ்சாயத்து போன்ற பல்வேறு முறையற்ற தொழில்களில் ஈடுபடுவதாக கூறப்படுகிறது.



இந்நிலையில் திருவள்ளூரில் உள்ள ஜாமி ஆ மசூதியின் தேர்தல் நடைபெறாமல் இருந்த நிலையில், திருவள்ளூர் மாவட்ட திமுக பிரதிநிதி முஹம்மது ரஃபி என்பவர் தேர்தலில் போட்டியிடாமல் சென்னை வக்பு வாரிய அதிகாரிகளிடம் லஞ்சம் கொடுத்து அட்ஹாக் கமிட்டி என்ற தற்காலிக இடைக்கால நிர்வாக குழு ஒன்றை அவரது தலைமையில் ஏற்படுத்தியதாகவும், மசூதியின் மரபிற்கு எதிராக இருந்ததாலும், இவரது கொடுக்கல் வாங்கல் வட்டி தொழில் சம்மந்தமாக இருந்ததாலும், அவரது தலைமையில் அட்ஹாக் கமிட்டி அமைந்ததை திருவள்ளூர் ஜாமி ஆ மசூதி ஜமாத்தார்களும் உலமாக்களும் ஏற்காமல் தவிர்த்தனர்.

ஆனால் முஹம்மது ரஃபி உள்ளூர் ஜமாத்தை கலந்து ஆலோசிக்காமல் தன்னிச்சையாக செயல்பட்டு வந்ததை திருத்திக்கொள்ள பல முறை முயற்சித்தும் திருத்திக் கொள்ளாததால் கடந்த 2025 ஆகஸ்ட் 23ந் தேதி சிறப்பு தொழுகைக்குப் பிறகும், கடந்த ஜனவரி 16ஆம் தேதி அன்று நடந்த சிறப்பு தொழுகைக்குப் பிறகும் நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டு வந்து பொறுப்பிலிருந்து நீக்கியுள்ளனர்.

இதனால் ஆத்திரமடைந்த முஹம்மது ரஃபி ஜாமி ஆ மசூதி ஜமாத்தார்களிடம் தகாத வார்த்தகளால் பேசும் வீடியோ தற்போது வைரலாகி வருகிறது. இதனால் ஆத்திரமடைந் முஹம்மது ரஃபி கடந்த 2025 நவம்பர் மாதம் சென்னை தேசிய புலனாய்வு மைய இயக்குனருக்கு புகார் ஒன்றை அளித்துள்ளார். அதில் ஜாமியா பள்ளி மாணவர்களுக்கு தீவிரவாத போதனைகள் மற்றும் மாணவர்களை இந்திய பெரும்பான்மைக்கு எதிராகவும், மக்களை இந்திய நாட்டுக்கு எதிராகவும் முஸ்லீம் மக்களை தயார் படுத்தி வருவதாகவும் அதனால் மதரஸா பள்ளியை மூடி அதை நடத்தி வரும் நிர்வாகிகளை சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொய்யான புகாரும் கொடுத்துள்ளார்.

இதற்கு ஜமாத் சார்பில் விளக்கமும் அளிக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. அதே போல் திருவள்ளூர் டவுன் போலீசிலும் முகம்மது ரஃபி கொடுத்த புகாரை விசாரித்த காவல் துறை உண்மைக்கு புறம்பாக புகார் கொடுத்திருப்பதாக கூறி எச்சரித்தும் அனுப்பி வைத்ததாக கூறப்படுகிறது. இந்நிலையில் மாவட்ட திமுக பிரதிநிதி முகமது ரஃபியை நல்வழிப்படுத்த நினைத்த ஜமாத்தார்களுக்கு தொந்தரவு கொடுப்பதுடன் அவரது வாகனத்தை வைத்து கொலை செய்ய முயற்சி செய்யும் முகமது ரஃபியிடமிருந்து பாதுகாப்பு வழங்கக் கோரி ஜாமி ஆ நிர்வாகிகள் திருவள்ளூர் எஸ்பியிடம் புகார் அளித்தனர்.

திமுகவில் மாவட்ட பிரதிநிதி பொறுப்பில் இருப்பதோடு, சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ்தமிழர் நலத்துறை அமைச்சருக்கு நெருக்கமானவர் என்பதால் தன்னை ஒன்றும் செய்ய முடியாது என்றும் மிரட்டி வருவதால் முகம்மது ரஃபி மீது தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளனர். விசாரித்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என எஸ்பி விவேகானந்தா சுக்லா தெரிவித்ததாக ஜமாத்தார்கள் தெரிவித்தனர்.

Published by **K.SABIULLA**,printed by **K.SABIULLA,** on behalf of **K.SABIULLA,** printed at **BEAUTIFUL** printers 6/1 devaraja Street,Triplicane chennai 600005.
puplished at 378/46.10th cross,Rajevnagar,manaparai trichy(dis) editor:**K.SABIULLA**, cell.78100-68421